வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.கஎண் 4380/ஆ4/2025 நாள் 08.04.2026

| | |
|---|---|
| பொருள் | தேர்வுப் பணி– வேலூர் மாவட்டம் மார்ச்/ஏப்ரல் – 2026 நடைபெற்று முடிந்த பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத் தாள் திருத்தும் முகாம் – **வேலூர் –72 எத்திராஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் குடியாத்தம்,திருவள்ளுவர் நிதியுதவி மேல்நிலைப்பள்ளியில்** 10.04.2026 முதல் நடைபெறும் விடைத்தாள் திருத்தும் பணி – பட்டதாரி ஆசிரியர்களை –உரிய தேதியில் விடுவித்து அனுப்ப தெரிவித்தல் –தொடர்பாக |
| பார்வை | அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 016677/பி2 / 2025 நாள் 30.03.2026 |

பார்வையில் காணும் அரசு தேர்வுகள் இயக்கக கடிதத்தின் படி, வேலூர் மாவட்டம் , **வேலூர் வேலூர் –72 எத்திராஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் குடியாத்தம்,திருவள்ளுவர் நிதியுதவி மேல்நிலைப்பள்ளியில்** கீழ்காணும் அட்டவணைப்படி நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி மேற்கொள்ளவுள்ளதால் அனைத்து பாட பட்டதாரி ஆசிரியர்களையும் உரிய தேதியில் விடுவித்து அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விடைத்தாள் திருத்தும் பணிக்கு விலக்கு அளிக்க கோரும் எவ்வித கோரிக்கையினையும் ஏற்க இயலாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

கண்பார்வையற்றோர் தவிர ஏனைய அனைத்து பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரையும் விடைத்தாள் திருத்தும் முகாமில் கீழ் குறிப்பிட்டுள்ள தேதி அன்று காலை 8.30 மணிக்கு கலந்து கொள்ள ஏதுவாக பணியில் இருந்து விடுவித்து அனுப்பிடவும் விடுவித்த ஆணையின் ஒரு நகலினை (முகாம் வாரியாக தனித்தனியே ) 09.04.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் சார்ந்த விடைத்தாள் திருத்தும் முகாமில் தவறாது ஒப்படைக்க வேண்டுமென அனைத்து அரசு/ ஆதி திராவிட /அரசு உதவிபெறும்/ நகரவை மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பத்தாம் வகுப்பு விடைத்தாள் திருத்தும் முகாம் பெயர் | AE'S பாட ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்தும் முகாமிற்கு விடுவிக்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|
| 1. | 72, எத்திராஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சத்துவாச்சாரி, வேலூர் | **11.04.2026** |
| 2 | 73,திருவள்ளுவர் நிதியுதவி மேல்நிலைப்பள்ளி, குடியாத்தம் | **11.04.2026** |

//ஒம்.//

முதன்மைக்கல்வி அலுவலர்

வேலூர்

**பெறுநர்**
தலைமைஆசிரியர்கள் / முதல்வர்கள்
அரசு/ அரசு உதவிபெறும்/ நகரவை / மெட்ரிக் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்.வேலூர் மாவட்டம்.

**நகல் –**

**1.** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.

2.முகாம் அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் பள்ளிகள் / தொடக்கக்கல்வி ) தகவலுக்காக அனுப்பலாகிறது.